PAGE:
DATE : / /

அக்டோபர் மாதப் பாடப் பகுதிகள்

செய்யுள் : ஏரெழுபது செய்யுள் திரளதிகல்
உரைநடை : வீட்டு மூலிகைகள்
இலக்கணம் : உவமை அணி
துணைப்பாடம் : கையற்கை வேளாண் விரிசூரானி நம்மாழ்வார்
(செயல்பாடாகக் கொடுக்கப்பட்டுள்ளது)

செய்யுள்

ஏரெழுபது (செய்யுள் திரளதிகல்)

I நிரப்புக.

1. நல்லொழுக்கம் மிக்கவர் உழவர்
2. கிசை என்பதன் பொருள் பாடல்
3. ஏரெழுபது நூலின் ஆசிரியர் கம்பர்
4. பசி மக்களைக் கொடுமைப்படுத்தாது
5. கம்பரின் படைப்புகளில் ஒன்று கம்பராமாயணம்
6. பாடலின் தலைப்பு ஏரெழுபது
7. கியல், கிசை, நாடகம் என்பன முத்தமிழ் ஆகும்
8. சீர் என்பதன் பொருள் சிறப்பு
9. கம்பரை ஆதரித்த வள்ளல் சடையப்ப வள்ளல்
10. உலகில் பல்வேறு சிறப்புகள் நடக்கும்

II புத்தகப்பயிற்சி :

பக்க எண் : 88 - படிக்க வைத்தல்

Scanned with OKEN Scanner

PAGE:
DATE : / /

உரைநடை - வீட்டு மூலிகைகள்

I வினா - விடை

1. கற்றாழை எந்தெந்தெல்லாம் மருந்தாகப் பயன்படுகிறது?

* உணவு, மருந்து, அழகு சாதனப் பொருள் மூன்றாகவும் பயன்படும் மூலிகை கற்றாழை. நல்ல சூரிய ஒளிபடும் இடத்தில் வளர்க்க வேண்டும். வாரத்தில் இரண்டு நாட்கள் நீர் ஊற்றினால் போதும். கதில் மனித உடலுக்குத் தேவையான 18 வகை அமினோ அமிலங்கள் உள்ளன. கற்றாழை சாறை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் சைனஸ் பிரச்சனை நீங்கும். இரத்த அழுத்தம், மலச்சிக்கல் பிரச்சனைகளுக்கு சிறந்த மருந்து.

2. ஆடாதொடா பற்றிய குறிப்புகளைக் குறிப்பிடுக.

ஆடாதொடா என்றும் ஆடு தொடா என்றும் அழைக்கப்படும் இச்செடியின் தூளில் இருந்து மூன்றாவது கனுவை எடுத்து தொட்டியில் நட்டு வைத்தால் வளரும். சளி, இருமல் அதிகம் உள்ளவர்கள் சிறிதளவு இந்த இலைகளை எடுத்து அரைத் தேக்கரண்டி சாறகம், 8 முதல் 10 மிளகு சேர்த்து 4 டம்ளர் தண்ணீரில் கொதிக்க வைத்து வடிகட்டி மூன்று நாள் இரண்டு வேளை சாப்பிட்டு வர நல்ல பலன் கிடைக்கும்.

3. துளசி மூலிகையின் பயன் யாது?

அதிகளவு ஆக்ஸிஜனை வெளிப்படுத்தும் துளசியைப் பயன்படுத்துவது முக்கியம். விதைகள் தூவினாலே வளரும் செடி இது. இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விட்டால் போதும். தலைவலி, காய்ச்சல், சளிக்கு இதை கஷாயம் வைத்து தேன் கலந்து குடிக்கலாம்.

4. கற்பூரவல்லியின் சிறப்பு யாது?

தண்டை வெட்டி வைத்தால் நிச்சயம் தழைக்கும் செடி கற்பூரவல்லி. வாரத்தில் ஒரு நாள் தண்ணீர் ஊற்றினால் போதும். எல்லா இடத்திலும் வளரும். எனவே குழந்தைகள் கூட இச்செடியை எளிதாக வளர்க்கலாம். குழந்தை முதல் பெரியவர்கள் வரை சளித்தொல்லை உள்ளவர்கள்

PAGE:
DATE : / /

கற்பூர வல்லியை வெறுமனேயோ, துளசி, தாதுவனை போன்றவற்றுடன் சேர்ந்து சாறு எடுத்தோ, தேன் கலந்து கொடுத்தால் வியாதி சரியாகும்.

II புத்தகப் பயிற்சி : பக்க எண் - 93, 94 படிக்க வைத்தல்.

இலக்கணம் - உவமை அணி

I நிரப்புக.

1. உவமை அணி என்பது கூறக் கருதிய பொருளை நன்கு தெரிந்த ஒன்றைக் காட்டி விளக்குவது ஆகும்.
2. 'வில் போன்ற புருவம்' என்பதில் உள்ள உவமானம் வில்
3. ஒரு பொருளை இன்னொரு பொருளுடன் ஒப்பிட்டு அழகு படுத்திக் கூறுவது உவமை அணி ஆகும்.
4. 'கொவ்வை போன்ற நிறம்' என்பதில் உள்ள உவமேயம் நிறம்
5. உவமை அணியில் உவமானம், உவமேயம், உவம உருபுகள் ஆகிய மூன்றும் வெளிப்படையாக வரும்.
6. உவமேயம் என்பது ஒப்பிடுவதற்கான பொருள்.
7. 'அருவி அன்ன பேச்சு' என்பதில் உள்ள உவம உருபு அன்ன
8. உவமானம் என்பது ஒப்பிடும் பொருள்.

II புத்தகப் பயிற்சி - பக்க எண் : 98, 99 - படிக்க வைத்தல்

Scanned with OKEN Scanner